வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்: வீரமணி

தேதி: 23.9.2022 நேரம்: மாலை 6 மணி

---

தலைப்புச்செய்திகள்

- பருவநிலை மாற்றம் உள்ளிட்ட உலகப் பிரச்சனைகளுக்கு நீடித்த தீர்வுகளை உருவாக்குவதில், முன்னணி நாடாக இந்தியா மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூல், புதுடெல்லி ஆகாஷ்வாணி பவனில், இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிடப் பட்டது.
- ஆயுஷ்மான் பாரத் - ஜன் ஆரோக்கியா திட்டத்தின் நான்காண்டு நிறைவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆரோக்கிய மந்தன் விழாவை, மத்திய சுகாதார அமைச்சர், வரும் ஞாயிற்றுக் கிழமை தொடக்கி வைக்கிறார்.
- புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், கடந்த 24 மணி நேரத்தில், புதிதாக 75 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது.

*மோடி சுற்றுச்சூழல்-1 (15)*

பருவநிலை மாற்றம் உள்ளிட்ட உலகப் பிரச்சனைகளுக்கு நீடித்த தீர்வுகளை உருவாக்குவதில், முன்னணி நாடாக இந்தியா மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று அனைத்து மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர்களின் தேசிய மாநாட்டை காணொலி காட்சி மூலம் அவர் தொடக்கி வைத்துப் பேசுகையில், சர்வதேச சோலார் கூட்டமைப்பு முதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த LiFE இயக்கம் வரை, உலகிற்கான பல்வேறு மாற்றங்களை இந்தியா கொண்டு வந்து இருப்பதாக கூறினார். வேகமாக வளரக்கூடிய பொருளாதாரங்களில் ஒன்றாக திகழும் இந்தியா, சுற்றுச்சூழலை வலுப்படுத்தும் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக அவர் கூறினார்.

இந்தியாவில் வனப்பரப்பு தற்போது அதிகரித்து இருப்பதாகவும், சதுப்பு நிலங்கள் வேகமாக விரிவடைந்து வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். இந்தியாவில் புலிகள், யானைகள் மற்றும் சிங்கங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், சிவிங்கிப் புலிகளை காப்புக் காடுகளில் விட்டு வளர்க்கும் திட்டம் அண்மையில் தொடக்கப்பட்டு இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

2070ஆம் ஆண்டிற்குள், கார்பன் புகை வெளியீட்டை முற்றிலும் கட்டுப்படுத்துவதற்கான தேசிய இலக்கை எட்டுவதில், மாநில அரசுகளும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என பிரதமர் கேட்டுக்கொண்டார். மறு சுழற்சிப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கும் பணிகளில் மக்கள் பங்கேற்பை ஊக்குவிக்கவும், மாநில அரசுகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். ஒருமுறை மட்டுமே பயன்படுத்த தக்க பிளாஸ்டிக் பொருட்களை தவிர்ப்பதிலும், கழிவு மேலாண்மை பணிகளிலும், சிறந்த நடைமுறைகளை, மாநிலங்கள் தங்களுக்கு இடையில் பகிர்ந்து கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

சுற்றுச்சூழலை மையமாகக் கொண்ட கொள்கைகளின் அமலாக்கத்தில், மாநிலங்களுக்கு இடையே, ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார். தொழில் துறையினருக்குத் தேவையான சுற்றுச் சூழல் அனுமதிகளை, வெளிப்படையான முறையில் விரைந்து வழங்குவதற்கான மத்திய அரசின் பரிவேஷ் இணைய தளத்தை, மாநில அரசுகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம்,

*மோடி சுற்றுச்சூழல்-3 (5)*

சம்பந்தப்பட்ட இதர அமைச்சகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். மாநில சுற்றுச் சூழல் அமைச்சர்களுக்கு இடையே குஜராத்தில் நடைபெறும் இந்த 2 நாள் தேசிய மாநாட்டில், வனவளப் பாதுகாப்பு, வன விலங்கு மேலாண்மை, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில், விவாத அரங்குகள் இடம் பெறுகின்றன.

*மோடி புத்தகம்-1 (17)*

பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூல், புதுடெல்லி ஆகாஷ்வாணி பவனில், இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிடப் பட்டது. அனைவருக்கும் ஆதரவு – அனைவருக்கும் வளர்ச்சி – அனைவருக்கும் நம்பிக்கை என்னும் தலைப்பிலான இந்நூலை, கேரள ஆளுநர் திரு ஆரிஃப் முகமது கான், முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு வெங்கையா நாயுடு, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் ஆகியோர் வெளியிட்டனர். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் உத்தேசங்கள் மற்றும் உறுதிப்பாடுகளை பிரதிபலிக்கும் வகையில் இந்நூல் அமைந்து இருப்பதாக, முன்னாள் குடியரசு துணைத் தலைவர் திரு வெங்கையா நாயுடு நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். சீர்திருத்தம்,

செயல்பாடு மற்றும் நல்லாட்சி என்பதே அரசின் தாரக மந்திரம் என்றும், இதனால் மக்களின் வாழ்க்கையில், பெரிய அளவிலான மாற்றங்கள் நிகழ்ந்து இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பெண்கள் மற்றும் விளிம்புநிலை மக்கள் மீது அரசுக்கு உள்ள அக்கறை, இந்நூலில் வெளிப்படுவதாக, கேரள ஆளுநர் திரு ஆரிஃப் முகமது கான் தமது உரையில் கூறினார். பொருளாதாரம், தூய இந்தியா, பசுமை இந்தியா, அறிவியல்-தொழில் நுட்பம், கலாச்சாரம், விளையாட்டு

*மோடி புத்தகம்-2 (8)*

உள்ளிட்ட பல்வேறு துறைகளில், பிரதமரின் தொலைநோக்கு பார்வைகளை, இந்நூல் வெளிப் படுத்துவதாக, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் தெரிவித்தார். தகவல் ஒலிபரப்புத் துறை செயலர் திரு அபூர்வ சந்திரா, பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு மயங்க் அகர்வால், அகில இந்திய வானொலி செய்திப்பிரிவின் தலைமை இயக்குநர் டாக்டர் வசுதா குப்தா, நூல் வெளியீட்டுப் பிரிவின் தலைமை இயக்குநர் திருமதி மோனிதீபா முகர்ஜி உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*ஆயுஷ்மான் மாண்டவியா (10)*

ஆயுஷ்மான் பாரத் – பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம், 4 ஆண்டுகளை பூர்த்தி செய்வதை கொண்டாடும் வகையில், மத்திய சுகாதார அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 2 நாள் ஆரோக்கிய மந்தன் விழாவை, சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா வரும் ஞாயிற்றுக் கிழமை தொடக்கி வைக்கிறார். உலக மற்றும் தேசிய அளவிலான சுகாதாரத் துறை நிபுணர்களும், கல்வி, தொழில் மற்றும் ஊடகத் துறை பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கிறார்கள். நாடு முழுவதும் 10 கோடிக்கும் மேற்பட்ட ஏழை குடும்பங்களுக்கு, ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை மருத்துவக் காப்பீடு வழங்கும் வகையிலான ஆயுஷ்மான் பாரத் – ஜன் ஆரோக்கியா திட்டத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி, கடந்த 2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடக்கி வைத்தார்.

*ஆசாத்பாரத் (9)*

சுதந்திர இந்தியாவின் 75 ஆண்டுகால பயணத்தின் வரலாற்று நிகழ்வுகள் மற்றும் முக்கிய தருணங்கள் குறித்து, அகில இந்திய வானொலி, சுதந்திர இந்தியாவின் குரல் என்னும் நிகழ்ச்சி தொடரை ஒலிபரப்பி வருகிறது. அந்த வரிசையில்..........

தொழில் நுட்பங்களின் பயன்பாடு மற்றும் மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் சேவைகள் மூலம் அனைத்து மக்களின் வாழ்க்கையை எளிமையாக்க, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு முயற்சிகள் குறித்து, நடப்பு நிதி ஆண்டிற்கான பட்ஜெட் உரையில், மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வெளியிட்ட சில கருத்துக்கள்…

(வாய்ஸ்)

*புதுச்சேரிகொரோனா (9)*

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், கடந்த 24 மணி நேரத்தில் ஆயிரத்து 311 கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டதில், புதிதாக 75 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது. அதே நேரத்தில் ஏற்கனவே இருந்த கொரோனா நோயாளிகளில் 116 பேர் குணமடைந்து விடுவிக்கப் பட்டனர். தற்போது, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் அனைத்து 4 பிராந்தியங்களிலும், 459 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளனர். பூஸ்டர் டோஸ் உட்பட, இதுவரை, 21 லட்சத்து 96 ஆயிரத்து, 893 டோஸ் கொரோனா தடுப்பூசிகள் பயனாளிகளுக்கு போடப் பட்டுள்ளதாகவும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

*புதுச்சேரிஆரோக்கியா (10)*

பிரதமரின் ஜன் ஆரோக்கியா திட்டம் தொடக்கப்பட்டதன் 4 ஆண்டு நிறைவை ஒட்டி, இன்று புதுச்சேரியில், சுகாதாரத்துறை சார்பில் நடைபெற்ற, விழிப்புணர்வு வாக்கத்தான் பேரணியை, முதலமைச்சர் திரு ரங்கசாமி கொடி அசைத்து தொடக்கி வைத்தார். சுகாதாரத்துறை செயலர் திரு உதயகுமார், சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமுலு உள்ளிட்டோர் உடனிருந்தனர். சட்டமன்றத்தின் பிரதான வாயிலில் இருந்து, நகரின் முக்கிய வீதிகள் வழியாக, கம்பன் கலையரங்கம் வரை நடைபெற்ற இப்பேரணியில், அன்னை தெரசா செவிலியர் பயிற்சி கல்லூரி, பாரதிதாசன் மகளிர் கல்லூரி மற்றும் சமுதாயக் கல்லூரியைச் சேர்ந்த மாணவ-மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

*சாமிநாதன் (6)*

புதுச்சேரி மாநில பிஜேபி தலைவர் திரு வி. சாமிநாதன் இன்று மத்திய சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, ஜிப்மரில் மருந்து தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். விரைவில் நடவடிக்கை எடுக்க, திரு சாமிநாதனிடம் அமைச்சர் உறுதி அளித்து

இருப்பதாக, மாநில பிஜேபி செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*புதுச்சேரிவேளாண்துறை (8)*

புதுச்சேரியில், விவசாய பட்டதாரிகள் மற்றும் விவசாய சான்றிதழ் பயிற்சி முடித்தவர்கள், முறையே 3 லட்சம் ரூபாய் மற்றும் 75 ஆயிரம் ரூபாய் மானிய உதவியுடன், வேளாண் சுய தொழில் மற்றும் வேளாண் தொழில்நுட்ப ஆலோசனை மையம் தொடக்க அக்டோபர் 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என வேளாண்துறை அறிவித்துள்ளது. விண்ணப்ப படிவங்களை, தட்டாஞ்சாவடியில் உள்ள கூடுதல் வேளாண் இயக்குநர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம், அல்லது, வேளாண் துறையின் இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

*புதுச்சேரிபட்டாசு (7)*

புதுச்சேரியில் தீபாவளிக்கு பட்டாசுக் கடை போட விரும்புவோர், மாவட்ட நிர்வாகத்தின் இணைய தளம் மூலம், வரும் 25ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. இதற்கென ஏற்கனவே வழங்கப்பட்ட கால அவகாசம் முடிந்துவிட்ட போதிலும், இணைய தளம் மூலமாக விண்ணப்பிக்கும் முறை பற்றித் தெரியாதவர்கள், மீண்டும் வாய்ப்புக் கோ◌ா◌ியதை கருத்தில் கொண்டு, தேதி இவ்வாறு நீட்டிக்கப்

பட்டுள்ளதாக, மாவட்ட ஆட்சித்துறை நடுவர் திரு வல்லவன் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

*வானிலை (5)*

மேற்கு திசைக் காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழகம் மற்றும் புதுச்சேரியில், 5 நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில், மேற்கு தொடர்ச்சி மலையோர மாவட்டங்கள், அதை ஒட்டிய மாவட்டங்கள் மற்றும் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில், லேசானது முதல் மிதமான மழை எதிர் பார்க்கப்படுகிறது.

*கிரிக்கெட் (5)*

இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி நாக்பூரில் இன்று மாலை நடைபெற உள்ளது. மொகாலியில் கடந்த செவ்வாய் கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில், ஆஸ்திரேலிய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, 3 போட்டிகளை கொண்ட இத்தொடரில் தற்போது முன்னிலையில் உள்ளது.

*போஷன் வாட்டிகா (14)*

நாடு முழுவதும், ஊட்டச்சத்து மிகுந்த காய்கறிகள், பழங்கள் மற்றும் மூலிகைகளை குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க போஷன் வாட்டிகா என்னும் ஊட்டச்சத்து தோட்டங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும், 4 லட்சத்து 37 ஆயிரம் அங்கன்வாடி மையங்களில், இத்தகைய தோட்டங்கள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. நடப்பு ஊட்டச்சத்து மாதத்தில், இப்பணிகள் பெரிய அளவில் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும், இது அல்லாது, 6 மாநிலங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாவட்டங்களில், சுமார் ஒரு லட்சத்து 10 ஆயிரம் மூலிகைச் செடிகள் நடப் பட்டுள்ளதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது. குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர், கருவுற்ற பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களிடையே ஊட்டச்சத்து நிலவரத்தை மேம்படுத்தும் வகையிலான, போஷன் அபியான் இயக்கத்தை, பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த 2018ஆம் ஆண்டு தொடக்கி வைத்தார்.

*நாடு கொரோனா (10)*

நாட்டில் இதுவரை பயனாளிகளுக்கு போடப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை, 217 கோடியே 26 லட்சத்தை தாண்டி அதிகரித்து உள்ளது. நேற்றைய தினம் சுமார் 14 லட்சத்து 91

ஆயிரம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டதாக, மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், நாடு முழுவதும் புதிதாக 5 ஆயிரத்து 383 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்ட நிலையில், 6 ஆயிரத்து 424 பேர் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர். குணமடைவோர் விகிதம், 98.71 சதவிகிதமாக உள்ளது. நாட்டில் தற்போது 45 ஆயிரத்து 281 பேர் கொரோனா சிகிச்சையில் உள்ளதாகவும், இது, இதுவரையிலான மொத்த எண்ணிக்கையில், 0.10 சதவிகிதம் என்றும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச்செய்திகள்*

பருவநிலை மாற்றம் உள்ளிட்ட உலகப் பிரச்சனைகளுக்கு நீடித்த தீர்வுகளை உருவாக்குவதில், முன்னணி நாடாக இந்தியா மேம்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரைகளின் தொகுப்பு நூல், புதுடெல்லி ஆகாஷ்வாணி பவனில், இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் வெளியிடப் பட்டது.

ஆயுஷ்மான் பாரத் - ஜன் ஆரோக்கியா திட்டத்தின் நான்காண்டு நிறைவை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆரோக்கிய மந்தன் விழாவை, மத்திய சுகாதார அமைச்சர், வரும் ஞாயிற்றுக் கிழமை தொடக்கி வைக்கிறார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், கடந்த 24 மணி நேரத்தில், புதிதாக 75 பேருக்கு கொரோனா தொற்று கண்டறியப் பட்டுள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.